பிஸ்மில்லாஹி.

சிங்கை

ஜொஹூர் பிரயாணக் கும்மி.

இஃது

அடியற்கைமங்கலம்,

வா. அ. ஷெய்குமுஹம்மது பாவலரவர்களால்

இயற்றப்பட்டு,

ஷையூர்

செ. முஹம்மது அபூபக்கா

வா. அ. அ. முஹம்மது இபுறாஹீம்,

இவர்கள் வேண்டுகோளினாலும்,

ஷையூர்வாசியும்

சிங்கப்பூர் பிரபல வர்த்தகருமாகிய

பி. முஹம்மது சுல்த்தான் அவர்கள்

பொருண்முயற்சியாலும்,

நாகபட்டணம்,

"ஹமீதிய்யா" அச்சுக்கூடத்தில்

அச்சியற்றப்பட்டது.

ஹிஜ்ரி 1328௵ ஸபர்மீ.

1910.

வெண்பா.

காப்பு.

மாலேறு சொர்க்கபதி மாட்சியுறு வாசியதின்
மேலேறு மக்கபதி மெய்நபிக்குக்—சேமேலேறு
ஆ … துணைற் பயனை யன்றளித்தவ … பொருளாய்
காரணத்துணிற்பவனை காப்பு.

பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

சிங்கை ஜோஹர் பிரயாணக்கும்மி.

கும்மியடி பெண்ணே கும்மியடி யெங்குங்
கோல்புரி ஆண்டவனைப் போற்றி
செம்மல் முகம்மது நன்னபி சேவடி
சீர்சிரமேத்தி நீ கும்மியடி. 1

ஆயிரத்தோடு தொள்ளாயிரத்தொன்பது
ஆர்மதி ஜூலாயினோர் திகதி
சேயிழையே குருவாரத்தினமிது
சிங்கை ஜோகர் நகர் சென்றிடலாம். 2

சோலைத்தடந்தவழ் பூலோப்பினங்கிது
தோன்றும் பாவைத் துறை முகமாம்
காலங்குருவாரம் பால மணைந்ததோர்
கப்பலித்தாரு ஸ்டீமரேடி. 3

கப்பலிலேறினோம் கத்தன் கிருபையால்
கங்கையில் சிங்கைத் திசை நோக்கி
செப்பிய கப்பலுட் சிறு மியந்திரச்
சித்ரமசைந்திடச் செல்வதைப்பார். 4

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

காலையில் சூரியன் காண்குதலாலின்றுக்
கனத்த சுகிர்தவாரமிது
பாலை வனமதின் பான்மையதோ நேரில்
பார்த்திடு கிள்ளான் பதித்துறையே. 5

கிள்ளான் றுறைமுக மெல்லாந் தெரிந்ததாம்
கேட்ட சரக்கை யிறக்கிவிட்டு
தெள்ளுமிரண்டரை நாழிகைக்குள்ளாகத்
திட்டமாய்க் கப்பலை விட்டனரே. 6

தேடிய சிங்கப்பூர் நாடித்திசைச்செலத்
தோணி சூரியன் பாரணிந்தான்
வாடிய மாலை யிருளெழுந்தானிதோ
வந்தானே சந்திரனந்தமதாய். 7

சந்திரச்சோதி ஜொலிக்குதேடி யதோ
சந்தனக்கூடின் றகைமையதாம்
பந்தமெழுந்ததோ பார்க்குமிடமெல்லாம்
பற்பலத்தீபத்தின் கப்பலைப்பார். 8

இன்னமும் பாரிதோ வெத்தனைத் தீபங்கள்
இந்தக்கடல்மீதி லங்குதேடி
சொன்ன மணி போலே சுற்று விளக்கொண்ணு
சோதித்துலங்குதே சுந்தரியே. 9

சுற்று விளக்கதின் பத்திச்சுடரது
தோகையே சிங்கப்பூராகுமேடி
சித்திர பானு வுதயத்திலே நாமும்
சிறந்தத்துறையி லிறங்கிடலாம். 10

சிங்கை ஜுஹர் பிரயாணக்கும்மி.

சேர்ந்தத்துறைமுகஞ் சிங்கை நகரிதோ
சேனா முகம்மதபூ பக்கரும்
ஆர்ந்தவராம் சீனா அப்துற்றஹீமுடன்
அந்த மனப்புக்கே வந்தவராம். 11

வந்து சலாத்துடன் வாகாயழைத்தோரின்
வண்டியிலேறினங் கண்டவர்கள்
சிந்தை மகிழ்ந்துத் தெரிந்தவர் சொல்லிய
சேதிசலாத்துக்கு மோதிக்கொண்டோம். 12

நாடியழைத்தவர் நண்பனும் பீனாமு
னாவென்ற சுல்த்தானினற்கடையில்
கூடி யாம் சென்றுக்குணமாயிருந்ததில்
குங்குமச்சோலையாஞ் சிங்கை நகர். 13

சிங்கைப்பூரென்றது தேவேந்த்ர பட்டணத்
தேர்ச்சி போலென்றும் யாஞ்செப்பிடலாம்
அங்கண் பாரின்னகரெங்கு மலங்கிர்தம்
அஷ்ட விலட்சுமி யாடுகிறாள். 14

ஆடிடும் தாமரையாள் வடங்கிய
வந்தனம் மித்திரர் சொந்தமதாய்
நாடிடும் வாணிப நற்கடையிலக்கமும்
நாற்பத்து ஓராறு நங்கையரே. 15

நங்கையே நம்மடியற்கை நகருளா
னண்பன் முகம்மது சுல்த்தானயம்
பொங்குமிவ்வாணிபம் பூணுஞ்சரக்கெலாம்
பூர்த்தியாயிங்குள நேர்த்தியைப் பார். 16

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

கண்ணாடிப் பெட்டியுட் காணும் பலவிதக்
கத்திக்கருவிகளெத்தனை பார்
திண்ணம் பெரிய வடுககம்மிமாரதில் 17
சித்திர் சாமான்கள் செப்பரிதே.

செப்பு நிருபங்கட்டுங்கருவிகள்
சேகரம் பல்வகைத் தேக்கமதாய்
பொற்பூவெழுத்துளப் பூணுங்கணக்கணிப் 18
புத்தகப் பத்தியுமெத்தனை பார்.

வன்னக்கலாசுடன் பொன்னெழுத்துள்ளதாய்
வாய்த்ததோர் பீங்கான் வகை வகையாய்
இன்னம் விளக்கு இனங்களு மெத்தனை 19
யென்று நீ எண்ண வியலுமோ சொல்.

பொன்னகை ரத்னப் பொருளணிப் பேழைகள்
பூட்டியடிக்கிய நீட்டமதில்
பன்னுமிரும்புத் தகரத்திற் பண்ணியப் 20
பாரியப்பேழைகள் சாரிய தாய்.

பார்க்கப் புதுமை கொள் ருக்கையின் மேலதோ
பஞ்ச வருணக்குளோப்புகளும்
தீர்க்கமாய் வெண்மைப் பசுமையும் பொன்மை செய் 21
செம்மையும் நீலச்சிறப்பையும் பார்.

எண்ணெய் மெழுகுத் திரியுடனேட்டுக
ளிட்டெரித் தீயத்தின் லேட்டுகளும்
தண்ணமிலக்டரி லாம்பு மிஸ்டாண்டொடு 22
சாரியாய் தொங்குதல் பாரியலாய்

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

செப்பு விருப்படுப்பித்தளையப்புறம்
சேர்ந்த சிறுவர்க்கு மேய்ந்த சில
ஒப்பிய பல் விளையாட்டுச் சருவிகள்
ஒன்றிரண்டோவது ஓதரிதே. 23

இந்தக் கடையுளவேய்ந்த சரக்கெலாம்
இத்தனை யென்றிதை எண்ணரிதாம்
இந்தக் கடையொரு ஷாப்புக்கடை என்பர்
எட்டு வகைத்தொழிலிங்குளதே. 24

ஜெர்மன் பிரான்ஸ் ஐரோப்பாவு மிந்தியா
ஜெப்பான் முதல் சீன தேசங்களின்
அரிதாம் சரக்குகள் சாமானமைந்ததின்
அருமை வியாபாரப்பெருமையைப் பார். 25

பாரெதிர் போட்டுப் பலகையில் தீட்டிய
பண்புடன் பீ. எம். சுல்த்தானென
நேரெதிர்ப்பார்த்தவர் நீளிக்கும் வாணிபம்
நேர்மையாய் கொள்ளுவர் சீர்மையதாய். 26

சேர்மையினன் மெத்தை எங்கும் நிறப்பிய
நின்ற சரக்குகளன்றுடகம்
ஏர்மதி கப்பிக்கயிற்று வழியாக
ஏறியிறங்கு மிங்கேந்திழையே. 27

ஏந்திழையே யிங்கிருக்குஞ் சரக்கெலா
மின்னவித மென்றிசைப்பரிதாம்
நேர்ந்த திக்கிள்ளங்கிஸ்த்திரீட்டிது நேரொடு
நீதியாய் கிட்டங்கு வீதி செல்வோம். 28

சிங்கை ஜ‍ஹோர் பிரயாணக்கும்மி.

கிட்டங்கு வீதியின் கட்டடம் பார் வெகு
 கிளர்ச்சி யிந்த்ரகம்... ... திதுவே வா
அட்டங்கொளிந்த வாச நகருக்கு
 அமராபுரியை யடுத்திடுமே. 29

சிகரெதைச் சொல்லப் பகர்தலரிதெழி
 னோர்த்தியாய்ப் பார்த்த விடங்களெல்லாம்
சிகரங்கள் கும்பக்கலசங்க டோன்றலாற்
 சித்திர வேலைகட் செப்பரிதே. 30

சித்திரக்கார ரைரோப்பியர் பாங்கியும்
 செப்புங்கிளப்புப்பற் சாப்புகளும்
எத்தனையோவது யெண்ணிக்கையே தேடி
 யேந்திழையே யப்பா லேகிடுவோம். 31

அஞ்சுகமேயதோ தஞ்சம்பகார் மிக
 ஆளத்தின் கோரிபினீளத்தைப்பார்
இஞ்சின் மரக்கலமெத்தனைப் பாரிதோ
 வேற்றப்படித்துறை யெண்ணரிதே. 32

எண்ணரிதாமிங்கு யிங்க்லீஷ் பிரான்சியர்
 இட்டாலி ஜர்மனும் ஆஸ்ட்ரேலியா
வண்ணமரிக்கன் அருமணி மற்றவர்
 வாட்டமிலாக்கப்பல் கூட்டத்தைப் பார். 33

மாடாடு தும்புடன் மந்தையில் கட்டிடும்
 வாறதுபோலவே வங்கங்களை
ஆடாது பாலத்தி லாளணி போன்று
 மணைந்தக் கப்பல் பிணைந்ததைப்பார். 34

சிங்கை ஜுஹுர் பிரயாணக்கும்மி

பாலமுமூன்றரை நாழியுமுள்ளதாற்
பாடி நடக்கவுங் கூடுமோ தான்
சீலமிடைக்கிடை வேலை கொளாபீசு
தேடுவர் வாணிப வீடணிபார். 35

பரவைக்கடல் நடு பார்மலையுச்சியிற்
படையுடை வீரர் குடிதடமாம்
திரை மெ[illegible]த்திருபாலும் நீடெழில் வீடுகள்
நெருங்குஞ் சுரங்க மரங்கமும் பார். 36

மாமலை மேலினு மண்ணெடுத்துள்ளினு
மண்டல் மன்னர் மருவிடாது
பூமலை மாதே பொழிந்திடும் பீரங்கிப்
பூட்டியடுக்கிய நீட்டத்தைப் பார். 37

நீட்டமென்னடி நேரிதோ பார்து
நீலமலைபோல பூலோஹந்து
வாட்டமோ துல்லப்பளாங்கானின் மன்னவர்
கூட்டத்தார் கூறையின் வீட்டையும் பார். 38

பூலோப்பிராணியாங் கோலாசிலாட்டிது
பூத்தப்பொழின் மலர் நேர்த்தியதாய்
காலமுஞ் சென்றத்துறுக்கிக் கவுன்சலர்க்
கார்மலை மேடையிற் கோரியும் பார். 39

கம்பம்பாரென்ற ஸ்தலத்தைக் கடந்து நாம்
கண்ட டிராம்வேயின் வண்டியிலே
தென்புடனேறியே செய்யது நூகொலி
திவ்விய தருஹாத் தெரிசிக்கலாம். 40

சிங்கை ஜொஹூர் பிரயாணக்கும்மி.

கண்மலை மேலொரு காரணர் செய்யது
ஹபீபு நூகொலியுல்லாவின்
பொன்மலை போலொளி பூத்திடுங் கோரியுட்
பூமண வாச சமாதியைப் பார். 41

பாரடி ஆண்டவர் பாதந்தொழுதேத்தி
பாத்திஹா வோதிப்பணிந்திடுவோம்
சீரடி செய்யது பூத்தை யென்றிப்புவி
செப்பிய சீமானிவர் தானே. 42

தானே யுவந்திடு மானே சலாத்துடன்
சம்மதமாயொரு கும்மியடி.
கானநறை பொழில் கம்பங்கிள்ளானையுங்
கண்டிட வண்டிகள் சென்றிடலாம். 43

கண்டவிஸ்தலமிது கம்பங்கிள்ளான் வெகு
காணு முஸ்லீம்கள் வாணிபமும்
விண்டிடும் பற்பல ஜாதி வியாபாரம்
வேண்டியே கூண்டதாய் பூண்டிடுவார். 44

பூண்டதோரிப்பதி புந்திகொண் மன்னவர்
போற்றிய செங்கோல் புரிந்தவராம்
காண்டியல் மன்னவர் கட்டட மாளிகைக்
காணுதல் பாரிதோ பூணுதலாய். 45

அப்துல் றமீதுஷா வன்னவரசரின்
ஆரிய மாளிகைப் பாரியதாம்
செப்பிடு மன்னவர் நட்பு மரபினோர்
சேர்ந்து மவர்மனை சூழ்ந்திருப்பார். 46

சிங்கை ஜௌஹர் பிரயாணக்கும்மி.

அன்னவர் தம்மனை யப்பாலு நன்மையை
அள்ளிடுங் குத்துபாப் பள்ளியேடி
இன்னமும் யாவா முஸ்லீம் தெருவிது
வெங்கணு நம்மறை தங்குலமே. 47

குலங்களைத்தனைக் கொண்ட திவ்வூரெனில்
கூறுமறபி துறுக்கியுடன்
இலங்கும் ஹிந்துஸ்தான் பாரீசு இந்தியர்
ஈரானும் காபூல் ஹபஷியினி. 48

இன்ன மகாசினத் தாருமலாயரும்
இபாவரி சொல் ஜாவாவும் நீயோவ்வர்
சொன்னதோர் மண்டிலிங் பிண்ணுங்கர்வோ குல
சூருமாம் போயுநங் காரரேடி. 49

சூரமச்சையர் சொன்ன மரபுளோர்
சுத்த விசுலாத்தின் பத்தியுளர்
நசாறி குழிந்தப் பாராறி சிங்கையில்
நேர்மை நிலைமை கொளோர்மையுளார் 50

ஒத்த வியாபாரச் சித்தமுளர் பல
வொருமை முஸ்லீம் பெரும்பாலும்
நித்த நியம மஸ்ஜிதுமெத்தனை
நேமி சிறந்த விப்பூமியேடி. 51

பூமியுட் பாவினைப் போன்ற திவ்வூரினிற்
பொல்லாக் குபிர்க்குலஞ் சொல்லவோ யான்
ஏமங் குபிர்க்குல மெத்தனை ஜாதியோ
வெண்ணிக்கை யேதெடிப் பெண்ணரசே. 52

சிங்கை ஜூஹுர் பிரயாணக்கும்மி.

அரசரா மிங்கிலீஷ் துரைத்தனத்தாரவர்
அஞ்சாத வீரராய் மிஞ்சுகின்றார்
கருதி யிவ்வூரைத் தன் கண்ணிமைப்போனிதங்
காத்து வருகின்றார் காலமெல்லாம். 53

ஏந்திழையே யிருளாகிறதாகையால்
இசைந்தக் கிளாங்கி ஸ்த்ரீட் டதிலே
சார்ந்திருந்ததோர் சாப்புக்கடையினிற்
றங்கி மறுதின மெங்குஞ் செல்வோம். 54

உத்தமியே வெள்ளி குத்துபாவின்றது
வுள்ளம் பெரியதோர் பள்ளியிலே
வித்தகமா யொரு கத்தனையானகம்
வேண்டித் தொழுதருட் பூண்டிடலாம். 55

தோத்திரமாகத் தொழுதுக் கொண்டோ மின்னஞ்
சொன்னப்பசிக்கெழிலன்னங்கொண்டோம்
ஏத்திய மாவண்டி லேறிக்கொண்டோமிது
வேகுங் கொடிமலைப் பாகங்கொண்டோம். 56

கொடிமலை யுச்சியின் கூறுமரத்துயர்
கூடிக்கொடிகள் குலாவுதடி
கொடி மரத்தாலொரு கூண்டு விளக்கது
கோடி மயம்போல வாடுமடி. 57

சொன்ன கொடிமலை தன்னில் சமாதியார்
சுல்த்தான் சிக்கந்தர் அவுலியாவாம்
மன்னுமவர் கோரி முன்னில் சியாறத்து
மகிழ்ந்து வோதிப் புகழ்ந்திடுவோம். 58

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

6

ஆடுதடி மயில் கூவுதடி குயில்
அன்னங்களந்தோ வுலாவுதடி.
கூடுதடிக் குளிர்க்கொண்ட லடிப்பதால்
கோதையே பூமலை மீதினிலே. 59

பூமலை யிம்மலை யாமலை யிந்திரன்
பூம்பொழிலென்றும் புகன்றிடுவார்
காம விகாரங் கழன்றிடுமோ விந்தக்
காவினில் வாசங்கமழ்வதினல் 60

வாசங்கரந்தைப் பூசிந்துரமாமலர்
மகரம் சந்தனம் சண்பகமும்
ரோஜாவு மல்லிகை முல்லை யிருவாட்சி
யொப்பு மலர் வெகு செப்பரிதே. 61

சிங்கைக் கவர்னரி னங்க மலையிது
சென்றேறிப் பார்க்கத்திறமுடனே
மங்கையே யுச்சி மலையிலிருக்குது
மன்னவர் மாளிகை யுன்னதமே. 62

உன்னதமென்னடி தண்ணீர் மலையிது
உச்சிப்படித்துறை யச்சமேடி
இன்னமும் பண்டிதரின்னீரும் பார்வைகொண்
டிரும்புக் குழாவழி யேகிடும் பார். 63

ஏகிடும் சஞ்சீவி யிவ்வூரின் மானிடர்க்
கெல்லாமுட் சீவ நிலையிதுவே
காகம் பருந்து முதல் மற்றணுகாது
காவல் புரிந்திடுங் கட்டளை பார். 64

சிங்கை ஜுஹர் பிரயாணக்கும்மி.

கட்டளைப்பெற்ற பல் இட்டப்பரிகளின்
காலடிப்பந்தயம் பாலடியாம்
வட்டணைக்கட்டிய இட்டத்தடா கத்தை
வண்டணி மாதே நீ கண்டிடவே. 65

கண்டிடப்பாதையில் தண்டலை சீதளக்
கஞ்சமலர்த்தட வாவிகளும்
கொண்டல் சுகத்திலே கூடி விளையாட்
கொத்தள மேன்மாடி மெத்தை மே 66

மெத்தையின் வீடது சுற்றுப்புறமெல்
மெல்லியர் ஆடவர் மேவிவந்து
சித்திர வேடிக்கை செய்து விளையாடி
சேயிழை போடவர் போய் விடுவார். 67

தப்பலே பாரதோ செய்யத்மூகம்பது
சக்கா பென்பவர் தக்கபொழில்
ஒப்பார வாவிகள் உள்ளமலையிதில்
உப்பவே யானந்தஞ் செய்யுமேடி. 68

மேடணி பங்களா நீட்கஞ்சுற்றிலு
மெல்லிய மல்லிகை முல்லைமரு
பூடணி சண்பகங் குங்கும வாச்சிகள்
புஷ்பங்கள் பற்பல நட்டெனவே. 69

நட்புடை வண்டுகள் நாட்டியறீங்கார
நாடியிராகங்கள் பாடுதேடி
புஷ்பங் குடைந்துண்ட பொற்சில வண்டுகள்
போதத்தால் நாதத்தைப் போக்குதேடி. 70

சிங்கை ஜுஹூர் பிரயாணக்கும்மி.

நாதமுழங்கிய நந்தவனநடு
  நாட்டிய வேறித்தடா கத்திலே
போதுளநாரை கடாராவோ டன்னங்கட்
  புல்லிவிளையாடும் பூங்குழலே. 71

பூங்குழலே சிங்கப்பூரிருந்தோர் சது
  புங்க நன்னாழிகை யிங்கு வந்தோம்
ஆங்கரை நாழிகை யப்பால் குளமுண்டு
  ஆண்டு பெருங்குளங் காண்டிடலாம். 72

காண்டிட வேண்டுமாம் பூண்ட யிவ்வூருக்குக்
  காரணமாகிய நீருணவாம்
நீண்ட கரையதோ கேரிற்றெரிவதால்
  நீட்டி நடைபடிப் பூட்டிடுவாய். 73

பூட்டிடுஞ் சிங்காரப் பூவெழில் சோலைகள்
  பூண்டு யிருபுறங் கூண்டு தண்டாய்
தாட்டிக மேல்கரை மேட்டினின்றேறி நீ
  சமுத்திரம் போலித்தடாகத்தைப் பார். 74

இருப்பிக்கலாகி யிருபுற மிட்டணை
  யிக்கரை யெங்குமியற்றியவர்
பொருப்புத் தரைத்தனக் காவல் புரிந்திட
  பூட்டினரெங்கினும் நாட்டினரே. 75

இத்தட மொன்றல வின்னஞ் சிலதுண்டு
  வெத்தட நீரெலா மித்தடத்தில்
வற்றி யொழுந்திடா தெத்தினையோ வழி
  வந்து நிறைந்திடு மெந்த நாளும். 76

சிங்கை ஜுஹுர் பிரயாணக்கும்மி.

காளிது மேற்றிசை நாடினான் சூரியன்
நம்மதிருப்பிடம் நாடிடலாம்
நாளை மருதினம் நாயன் கிருபையால்
நாடு மிடந்தோறும் நண்ணிடலாம். 77

நாடிய நாட்டமு னல்ல ஜொகர் நகர்
நற்றின மாதித்தன் பற்றி செல்வோம்
கூடுமறுவரோ டாடும் புகை ரதம்
குன்றுமலேறியே சென்றிடலாம். 78

குன்றுமுகம்மது சாலிகு அபதுற்ற
குமானும் அப்துற்றஹீமுடனே
மன்றல் முகம்மதபூபக்கர் சுல்த்தானு
மாசவிப் பாவலர் மேவினரே. 79

மேவலர் நம்மறை வேந்தன் ஜொகர் பானு
மேவு றயில்வே ஸ்டேஷனிது
பாவலரோரடைவ ராவலோடேறிய
பறக்கும் றயிலோ நெருக்கமடி. 80

இந்தப் புகைரத மேறிய சீனர்க
ளேதுக்குச் செல்கிறார் சூதுக்கடி
அந்த ஜுகர் மன்னனாகாத காரியம்
ஆண்டு வெகு காலம் வேண்டுகிறார். 81

கண்டதிரண்டரை நாழிகைக்குள்ளாகக்
காவினதிக்கரைத் தாவி வந்தோம்
வண்டியை விட்டு யிறங்கி வரிசையாய்
வாகுடன் கப்பலில் வந்ததினால். 82

சிங்கை ஜூகர் பிரயாணக்கும்மி.

கப்பல் நெருப்புப் பறக்கக்கடந்தது
காணுஞ் ஜொகருக்கரையோரம்
தெப்பமுந் தொட்டு விருப்பணைப்பாலத்தில்
சேர்ந்து விறங்கினோம் சேயிழையே. 83

சோலைத்தடமலைச்சூழ்ந்திருக்குமிந்த
ஜொகருபாறென்னுந் தொன்னகராம்
கோலமுடனுங்கள் கூடி வந்தோமந்தக்
கோலத்தைக்கேட்டு நீ கும்மியடி. 84

நாலோடிரண்டு பேர் நாங்களுங்கூடியே
நந்தவனஞ் ஜூகர் வந்ததிலே
வேலையில்லாத சுப்பாய் மலாயர்கள்
வீதிக்கு வீதியாம் மெல்லியரே. 85

மெல்லிய ராடவர் சிந்தையதாகவே
வேண்டிய கூண்டிகள் காண்டிடுவாய்
சொல்லிய வீதிகள் தோன்றுங்கிரியதில்
சுற்றிவளைந்திடுந் தொன்னகராம். 86

தோன்றல் இபுறுஹீம் ஆண்டநகரிது
சொன்ன மகனபூபக்காவர்
தோன்றுந் தனசுதன் சுல்த்தானிபுறுஹீம்
சொந்த வரசாட்சி யந்தமிதே. 87

இந்த வீதி யிருபுறம் பாரடி
யேற்கு மளிகை ஐவளிக்கடை
கந்தக்கடை மலர்க்காணுங் கடை மிட்டாய்
காசுக்கடைகளுநெங் கண்டிடுவாய். 88

சிங்கை ஜ்ஞகர் பிரயாணக்கும்மி.

தங்கக்கடை கத்திச் சாப்புக் கடை விலேத்
தாசிக் கடையுடன் தய்யற் கடை
பங்கக்கடை சூது யெங்குங் கடை போதை
பற்குல மானிடர் விற்குங்கடை. 89

ஜெப்பான் மலேயர் மஞ்சளிர் யிந்தியர்
சிற்சில ஜாதியர் செய்தொழில்கள்
ஒப்பிடுஞ் சிங்கைத் தொழிலுக்கோ ராயிரத்
தொன்றினிலோர் பங்குச் சொல்லரிதே. 90

பார்க்குமிடமெல்லாம் பற்பல சூதேடி
பாரிலே யிப்படிப் பார்த்ததுண்டோ
மார்க்க யிசுலா மறைவழி மன்னர்க்கு
மற்றது நன்முறை சொற்றதிலே. 91

கோட்டைக் கொடிமரம் நீட்டத்தைப் பாரீதோ
கூடுங் கொடியதின் ஆட்டத்தைப் பார்
பாட்டையில் சங்கிர்தப் பாட்டையும் பார் வெகு
பற்பல ஜாரட்டு வோட்டத்தைப் பார். 92

நந்தவனஞ் ஜோக ரந்தமா மூரிலே
நாடுந்தொழுகையின் வீடதுவே
மந்தரமேருச்சி மாளிகையோவது
மாசகலும் பள்ளி வாசலும் பார். 93

கண்டு யிருப்பாமோ அண்டரின் வீடென்று
கண்டவர் மெச்சிடுங் கனகாலயம்
பண்டுள மன்னவர்ப் பார்த்து மறியாத
பக்குவமுள்ளதோர் பள்ளி யென்பார். 94

சிங்கை ஜௌஹர் பிரயாணக்கும்மி.

9

தற்கால மன்ன ரிபுருஹிம் தந்தையர்
  தானே சுயாதீனத் தகைமையதாய்
பொற்கோலம் பூத்ததோர் பொன்மேருத்தன்னைப்பில்
  போலவியற்றிய ஆலயமாம். 95

காலங்கடந் தபூபக்காராம் காவலர்
  கண்டது லண்டன் ஐரோப்பாவிலே
வேலை விசித்திர ஆலயமொன்று போன்
  மேடு மலையிதில் பூட்டினரே. 96

பூட்டினுர் துங்கபூ பக்கரவர் நாளும்
  பூர்த்தியாய் லண்டனில் பார்த்ததுபோல்
நாட்டினுர் நானில மெங்கும் புகழ்ந்திட
  நாலாறுடையவ ராலயமே. 97

நாலு பாலிலும் நன்மனருவெனும்
  நாட்டியக் கோபுரம் நான்கதுவாம்
ஜாலரின் வேலைக ளொவ்வோ ரடுக்கதிற்
  சாளர மாடஞ் சமைந்ததைபார். 98

பள்ளியி னீட்டம் நடையடிக்காறுபத்
  தாகுமா நாற்பதடி யகலம்
வெள்ளைப் பளிங்கின் மேனிநிகர்த்திட
  வேண்டிய கல்லதின் விந்தையைப்பார் 99

இட்டமுடனடை யெட்டடித் தாழ்வார
  மிப்படி முப்புற மாகுமடி
வட்டச் சதுரங்க மிட்ட ஹவுலதின்
  வானில் விளையாடு மீனிதுவோ. 100

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

செப்பிடும் பாரிபக்கப்பங்க ளெட்டதிற்
சேர்ந்திடும் விட்டமிரும் பதுவாம்
அப்பாலுங் கூரைமேற் செப்புத்தகடிது
அங்கக்கலசங்க டங்கமதாய். 101

வெண்மையும் பொன்மைப் பசுமையுடன் செம்மை
விஞ்சைகொள் பஞ்சவருணமதாய்
கண்ணாடி வேலையைச் சொன்னால் தெரியுமோ
கண்ணால் பார்த்து மகிழ்ந்திடுவாய். 102

பாலடி வெள்ளியோ ஆலயத்துட்சுவர்
பார்த்தால் வதனந்தெரி வதைப்பார்
காலடி வைத்திட மேலுஞ் சிலிர்ப்பதால்
கண்ணாடிக் கல்லென்றுங் காணுதேடி. 103

பட்டண மேன்மலை மேலொருபள்ளியுங்
கட்டினார் கோபுரக்கால் சதுரம்
வட்டமணாருக்கள் சுற்றுபடியது
வானேறும் பாவனை யானதுவே. 104

வேலைமணாரவின் மேலேறிப் பார்த்ததில்
மேகமுலாவுதே மேனி யெல்லாம்
சீலம் பொழிந்திடும் சிங்கைநகரிதோ
சித்திரம் போன்றுத் தெரிதலும்பார். 105

கூடிமுஸ்லீம்க ளாடித்தொழுதிடும்
கோல மகாமேரு வாலயமாம்
தேடிய வெள்ளியின் வாரத்தின் சேகரஞ்
சேருமவர் தொகை செப்பரிதே. 106

சிங்கை ஜூஹுர் பிரயாணக்கும்மி.

குன்றுக்கு மேலொரு குத்துவிளக்கொன்று
கூடியெறிந்திடுங் கொள்கை யைப்போல்
அன்று தொட்டில்லாத வாலயமம்பல
ஆடும் விளக்கதி லானந்தமே. 107

ஆடும் விளக்கெழிலான கிளைசெடி
யப்பதி னெட்டது மிப்படிப்போல்
சேடுபளிங்கிச் சரவிளக் கொன்பதாஞ்
செப்பணி சித்திர மின்பரும்பார். 108

பட்டணமேல் ஜொகருக்கிது பள்ளியோ
பாரொரு காதத்தி னுருக்கிது
கட்டண மேன்மைச் சிறந்திடக் காண்பதில்
கட்டிய மன்னர்க் கருதாரே. 109

மன்ன ரொடுமவர் முன்னோரிரு பாலர்
வங்கிஷ ராஜவழி முறையார்
பன்னுஞ் சமாதி மடப்பொழில் பாரிதோ
பாத்திஹா வோதலாம் நேர்த்தியதாய். 110

நேரும் பொழில்செறி கோரிகள் லெப்பைமார்
நீதிகுரு ஆனு மோதுகிறார்
சாருஞ் சலவைக்கல் நீருங்கசிந்திடத்
தக்கமடப்பள்ளித் தைக்காலன்றே. 111

தைக்கால் சியாரத்து மெய்க்கமுடிந்ததால்
தார்குழமேல ராஜசார்புகளை
மிக்கமலை யுச்சிப் பக்கமிருப்பதை
மெய்ப்புடன் கண்டு மப்பாலுஞ் செல்வோம். 112

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

செல்வத்தில் பாரமேதோ சீரெழின் மாளிகைச்
சித்திரமாடம் விசித்திரமாம்
சொல்வதின் மேனிலை பல்லரண்மாமனை
சூழசுகத்துக் குலாவுமுத்தம். 113

நீராடு முத்தம் நிலவாடு முத்தங்க
ணேரிழையோ டதி லீலை முத்தம்
பாருயர் சிங்காரப் பைம்பொழில் சூழவே
பற்படியாக விருப்பதைப் பார். 114

கண்ட வரணிப்பால் காணுந்திடாதிற்
காலடியாமொரு போலடி பார்
வண்டிடு ராகமோ வாய்குழல் பானுகள்
வைத்தநறு பத்துகால் மானிடரே. 115

மானிட ரித்தனை பேரும் வரிசையாய்
வாசிக்குமானந்தம் நேசிக்குமே
தேனொடு பார்முடி மேற்சில பீரங்கித்
தேக்கியிருக்கின்றார் சேயிழையே. 116

பூர்த்தி ரயில்வேலை பார்த்து முடித்தனர்
பூலோப்பினுங்கொடு கோலாலம்பூர்
வார்த்தை யவ்வூரதால் வந்தி வண்டங்கிடும்
வட்ட மிஸ்டேஷனின் கட்டடம் பார். 117

பாரொளி சூரியன் மேருவிறங்கினன்
பாரகமே யிருளாகினதால்
சீரெழிற் கப்பல் புகை ரதமேறிப் பின்
சிங்கை நகர்க்கின்று சென்றிடலாம். 118

சிங்கை ஜுஹுர் பிரயாணக்கும்மி.

சென்றிடப் பாலத்திற் சினக்குழுக்கள்
செறிமை நெருக்குறூர்ச் சிக்கடியாய்
அன்றிருளான தா லத்திருடர்க்கிது
அடிக்குங் களவுக்கிடுக்கமில்லை. 119

அங்கோ திருடர்க் களவெடுத்தாரென்
றலறிய சத்த மனேகமடி
இந்தாப் பிடியென்று சொல்வதே யல்லாது
வெட்டிப்பிடித்தவ ரில்லையேடி. 120

கள்ளத் தொழிலுக்கு முள்ள நகரிது
காவல் செய் மானிடர்க் கைத்தொழிலாம்
தெள்ளியே பேசுறூர் சிற்சில சேவுகர்
திருடரிற் கூட்டுத் தினந்தினமே. 121

வாரத்துக்கோர் முறைப் பாலத்துறைதனில்
வல்லடி சில்லரைக் கொள்ளையடி
சீரற்ற நேரத்தில் சோரர்க்கு மானந்தம்
செல்லவே வந்திடில் தொல்லையேடி. 122

தொல்லைகளற்று சுகம் பல பெற்று நற்
றேய்ந்த மரக்கலம் பாய்ந்து வந்தோம்
செல்லும் [illegible]ல் கண்டிரும்பவு மேறியே
சிங்கை நகருக்கிதோ சென்றிடலாம். 123

மாலையிலெட்டு மணிக்கவண் விட்டதில்
வம்பிலா சிங்கைக ளென்பதனை
சால மணித்துகைச் சார்ந்திவண் டங்கினுன்
தக்க ஸ்டேஷனின் பக்கமிதாம். 124

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

பக்கமிறங்கி நற் பாதை நடக்கையிற்
பார்க்கப் பகலதி னேக்கமேடி
மிக்கத்தெருவீணி மேவியத்தீபங்கள்
வெண்மை நிலவதின் றன்மையடி. 125

தாட்டிகரா பர்ஸ்ட் ஹோட்டலைப் பாரிதோ
சாடுங் கலியாண வீடது போல்
பூட்டியிலக்டெரிக் காந்தப் புகை தீபம்
பூத்திடு மாயிரம் நேர்த்தியதாம். 126

பாடகம் பூட்டிய நாடகச்சாலைகள்
பாட்டையிலெங்கணும் நாட்டினர் பார்
ஆடகம் பூத்தணித் தாடகப்பெண்களும்
ஆடிடுவாரிசைப் பாடிடுவார். 127

ஆகையால் நம்மதிருப்பிட மாகினே
மப்பால் மருதின மெப்பாலுரை
வாகுடன் வந்திரு வாரமுமானதால்
மன்றல் பிணங்கூருஞ் சென்றிடலாம். 128

சென்றிடலாமென சுல்த்தானு மின்னமோர்
திங்களிருக்கவுந் தேடுகிறார்
நன்றிது வென்று நீ நாலாந்தினமதில்
நம்மில் பிரயாணக் கும்மியடி. 129

பேதக மில்லாப் பிரயாண மென்றதால்
பிடிரு மூன்று பேர் நாடு நண்பர்
சாதக மேன்மை விருந்தளித்தாரதை
சம்மத மென்று நீ கும்மியடி. 130

12

சிங்கை ஜுஹுர் பிரயாணக்கும்மி.

தெள்ளு மலாக்காப் பள்ளியிலே சென்று
தேடு மிறைவனை நாடியின்று
வெள்ளிக்கிழமையா வேண்டித்தொழுது
விடிந்த காலை யெழுந்ததிலே. 131

காலை யெழுந்துக் கடும் பகலானதால்
கண்டு கொண்டோம் சலாம் விண்டு கொண்டோம்
மேலுரை யானதோர் நாலுடனாறு பேர்
மேவித் துறைமுகந் தாவி வந்தோம். 132

ஏறிய கப்பலும் ஈப்போவதின் பெயர்
ஏகுநம் சங்கையிற் கிங்கு வந்தோர்
தேறிய வந்தனஞ் செப்பியவர் செலத்
தேர்ச்சிப் பயணமு மாச்சுதேடி. 133

ஆனதோர் கப்பலு மந்தம் பிணுங்கதி
ஞற்றிசை யெதிரேகிடலால்
ஈனமிலாக் கரைக்கானக் கிள்ளான்துறை
யெற்றவிட மீதிறங்கிடலாம். 134

காலையில் வந்த யிக்கப்பலும் பிற்பகல்
மாலையி லேகுவானுனதினுல்
வேலை பொழில் கோலாலம்பூர் பதி
விரும்பிச் சென்றுத் திரும்பிடலாம். 135

ஆமென்று சொல்லி யடுத்த நயிலி
லடவுடன் வந்தோம் திடமுடனே
ஓமென்று சொல்லிப் புகைத மோடிய
வோட்டமும் வாயுவின் கூட்டதுவே. 136

சிங்கை ஜோஹுர் பிரயாணக்கும்மி.

நாலரை யின்னமோர் தானரைக்காதமும்
நந்தவனம் பதி வந்ததிலே
கோலாலற நெறிக் கோலாலம்பூரெனுங்
கொண்டல் நகரிது கண்டோமேடி. 137

கண்ட பல் வீதியுங் கட்டட மேன்மையுங்
காவலர் சிங்கைப் பிறுங்கதர்க்கு
முண்டகத் தந்தை சுண் மூன்று நற் பாலரில்
முன்னோ னடுஅது பின்னோனிது. 138

பின்னோனைப் போலப் பெரும்பதியோவிது
பேதக மில்லைப் பெரும் பதியே
மன்னவர் போற்றிய மாமுஸ்லீம்களின்
மாசகலோர் பள்ளி வாசலிதே. 139

பள்ளியை நோக்குதி ஹில்லி நகருளப்
பாரியப்பள்ளியி னேரியலாம்
உள்ள யிக்கவர்ன மெண்டாரு மொன்றாகவே
யோர்மை செய் வேலைகள் சீர்மையேடி. 140

சீரெழில் கம்பங்கள் சித்திர மண்டபஞ்
சிங்கார வாசலலங்காரமும்
சேருங் கலசங்கள் கோபுரக் கும்பமுங்
கூசு மழகையும் பேசரிதே. 141

பேசரிதிப்பள்ளி வாசலிவ்வூருக்குப்
பேணிக்குமாமுடி மாணிக்கம்போல்
வீசும் பிரகாச வாச யிசுலாத்தின்
விந்தை யீதென்று நீ கும்மியடி. 142

சிங்கை ஜூஹர் பிரயாணக்கும்மி.

கும்மியடி கோலாலம்பூர் சிறப்பையுங்
கூடிக்கண்டோ மிடந் தேடிக்கொண்டோம்
நம்மில் ஸ்நான முடித்துக்கொண்டோமிந்த
நண்ணும் பசிக்கெழி லன்னங்கொண்டோம். 143

அன்னகூட திசை பக்கத்திரோனவன்
ஆடுகிறான் தேரி லோடுகிறான்
வன்ன மிரண்டுடன் முக்காலிருக்கானும்
வாய்ந்த மணி றாயில் தோய்ந்திடலாம். 144

போரியல் மாவதுப் போலப் புகைரதம்
புள்ளாடும் பொய்கையாங் கிள்ளானிலே
வாரியல் பூண்ட மரக்கலம் பாரிதோ
வந்தேறிக் கொண்டதால் சுந்தரமே. 145

சுந்தரச் சோதி நிலவாட விசைத்
தோகையே குப்[illegible] நடமாடக்
கந்[illegible] கத[illegible] விந்தக்
கட[illegible]ந்திர மாடியதே. 146

ஆழிமே[illegible] கப்பல் அசைந்தாட வெகு
ஆன[illegible]தக்கொண்டல் சுகமாட
வாழிப்[illegible]தமுந்தன் வாயாடப் பினாங்
வன்[illegible]மலை விளக்காடுது பார். 147

அடிமலை[illegible]தீபங் கொடிமலையாமிங்
கடர்ந்த விருளுங் கடந்ததினால்
கொ[illegible]விடையாளே குதாவிறகூலருள்
கொண்டு பினாங்கெழிற் கண்டதினால். 148

பினாங்குத் துறைமுகப் பாலம் பெரிதிது
பீடுறும் பெல்லாம் பற்காலிரும்பாம்
தானம் பெயர்ந்தொரு கானமலை வந்துத்
தாக்கிடினுந் தகர்க்காதிது பார். 149

சிங்கை ஜொஹர் பிரயாணக்கும்மி.

தாலமிதி லிந்தப் பாலத்திறம் போல்
சமைந்ததுமில்லை யமைந்தது கேள்
காலப்பொழுதினிற் பால மதினாததால்
கரையி லிறங்கத் திறங்கொளேடி. 150

திரங்கொளிபுபதி செப்பவரிமெழில்
தீரயூக்க் கல்லாபரணம்
காங்கள் மார்பு கழுத்தணி பூண்டிடுங்
கர்குழலே நடவாரழகாய். 151

காலினடியற்கை மங்கலராவன்று
காவன்று சொந்தக் கடையிது பார்
பாவினில் புலவர் பாவலர் தங்கிடும்
பாறகடை யணியமீறு கடை பார். 152

பாவலனுவில் கவி வளர நிலைப்
பற்றுமொருமைத் தவம் வளர
மேவுந் திருச்செல்வமே வளர வென்றும்
வேண்டி நின்று நீ கும்மியடி. 153

கும்மியடி குலக்கோத்திரத்தார்களுங்
கூடுமொருமையி னேயர்களும்
செம்மை யிக்கும்மிப் படிப்பவர் கேட்பவர்
செழித்து வாழ்கவே கும்மியடி. 154

ஆதியிறை யருடான் வாழி யெங்க
ளண்ணல் முகம்மது தீன் வாழி
பாது முகிய்யித்தீன் தாள் வாழியருட்
பாவலன் கும்மியும் வாழி யென்றே. 155

முற்றுப் பெற்றது.
